விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள்
பிறப்பிப்பவர் : திரு.இரா.கண்ணன், இ.ஆ.ப

செ.மு.ந.க.எண் : 420/அ1/2018

நாள் : 12.09.2020

பொருள் : பணியமைப்பு – விருதுநகர் மாவட்ட சமூகநல அலுவலகம் - ஒன் ஸ்டாப் சென்டர் திட்டத்திற்கான - பணியிடங்களை நிரப்புதல் - தொடர்பாக

பார்வை : சென்னை, சமூகநல ஆணையர் அவர்களின் ந.க.எண்: 27236/SRCW/2018, நாள்:28.01.2019.

ஆணை:-

பார்வையில் காணும் ஆணையின்படி விருதுநகர் மாவட்ட சமூகநல அலுவலகத்தில் ஒன் ஸ்டாப் சென்டர் என்ற திட்டத்திற்காக மைய நிர்வாகி -1 மூத்த ஆலோசகர் -1, வழக்கு பணியாளர் -2, தகவல் தொழில்நுட்ப பணியாளர் - 1, பல் நோக்கு உதவியாளர்-1, காவலர்/ஓட்டுநர்-1 ஆகிய பதவிகளுக்கு பணிநியமனம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஒன் ஸ்டாப் சென்டர் திட்டத்தில் காலியாக உள்ள மைய நிர்வாகி (Centre Admin) பணியிடத்திற்கு ஆர்.எஸ். சுவாதி என்பவருக்கு பணிநியமனம் செய்து ஆணை வழங்கப்படுகிறது.

தனியருக்கு ஒப்பந்த அடிப்படையில் மாதம் ரூ.30,000/- (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) ஒப்பந்த ஊதியம் வழங்கப்படும் என உத்தரவிடப்படுகிறது.

இப்பணி நியமனம் முற்றிலும் தற்காலிகமானது என்றும் இப்பணிநியமன உத்தரவை கொண்டு எவ்வித முன்னுரிமையும் கோர இயலாது என தெரிவிக்கப்படுகிறது.

ஒன் ஸ்டாப் சென்டர் திட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு பணிபுரிய வேண்டும் என்றும், இவரது பணியில் ஏதேனும் குறைகள் காணப்பட்டாலோ சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழ்களில் ஏதேனும் தவறு இருப்பது தெரியவரின் எவ்வித முன்னறிவிப்புமின்றி பணிநீக்கம் செய்யப்படுவார் என தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/- இரா.கண்ணன்,
மாவட்ட ஆட்சித் தலைவர்

//உண்மை நகல் உத்தரவுப்படி//

15/9/2020

மாவட்ட சமூக நல அலுவலர்,
விருதுநகர்.

15/9/2020

பெறுநர்
ஆர்.எஸ். சுவாதி,
6/662, அவ்வையார் தெரு,
லெட்சுமி நகர், விருதுநகர்.

நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

1. சமூகநல ஆணையர்,
   சமூகநல ஆணையரகம்,
   பனகல்மாளிகை 2வது தளம்,
   சைதாப்பேட்டை, சென்னை-15 – தகவலுக்காக
2. இருப்புகோப்பு